(6 pages) **Reg. No. :** ...................................

**Code No. : 22108** **Sub. Code : SMTA 41**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2021.

Fourth Semester

Tamil — Core

இலக்கணம் — அணியிலக்கணம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்து எழுதவும்.

1. செய்யுள் எத்தனை வகைப்படும்?

(அ) மூன்று (ஆ) நான்கு

(இ) ஐந்து (ஈ) ஆறு

2. கவிஞன் தான் கூறுகின்ற குறிப்பினால் ஒரு சிறப்புப் பொருளை உணர்த்துவது

(அ) உதாரம் (ஆ) ஒழுகிசை

(இ) இன்பம் (ஈ) சமநிலை

3. “எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்

சொன்முறை தொடுப்பது” – எந்த அணி?

(அ) உருவக அணி (ஆ) தீவக அணி

(இ) விலக்கணி (ஈ) தன்மை அணி

4. புலவன் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்த பிரிதொன்றைச் சொல்லும் அணி எது?

(அ) வேற்றுமை அணி (ஆ) ஒட்டணி

(இ) விபாவனை அணி (ஈ) தீவக அணி

5. புலவன் பொருளின் அழகை உவந்து சொல்லும்போது உயர்ந்தோர் வியப்படையும்படி சொல்லும் அணி எது?

(அ) அதிசய அணி (ஆ) தற்குறிப்பேற்ற அணி

(இ) சிலேடை அணி (ஈ) உருவக அணி

6. உள்ளத்தில் நிகழும் தன்மை புறத்துத் தெரியுமாறு எட்டுவகை மெய்ப்பாட்டினால் நடப்பதைக் கூறும் அணி?

(அ) உதாத்தவணி (ஆ) சுவையணி

(இ) நுட்பவணி (ஈ) ஏது அணி

7. வியக்கத்தக்க செல்வத்தின் உயர்ச்சியையோ, மேம்பட்ட உள்ளத்தின் உயர்ச்சியையோ கூறும் அணி எது?

(அ) அவநுதியணி (ஆ) உதாத்த அணி

(இ) பரியாய அணி (ஈ) சமாயித அணி

8. ஒரு தொடர், சொல் பலபொருள் புலப்பட வரும் அணி

(அ) சிலேடை அணி (ஆ) உருவக அணி

(இ) விசேட அணி (ஈ) பிறிதுமொழிதல் அணி

9. தான் பழிக்கக் கருதிய பொருளின் இகழ்ச்சித் தன்மை வெளிப்படுமாறு மற்றொரு பொருளைப் புகழந்துரைக்கும் அணி எது?

(அ) புகழாப் புகழ்ச்சி அணி

(ஆ) மாறுபடு புகழ்நிலை அணி

(இ) சிலேடை அணி

(ஈ) விரோத அணி

10. இன்ன தன்மை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவிஞன் தான் கருதியதனை விதிப்பது — எவ்வகை அணி?

(அ) சங்கீரண அணி (ஆ) ஒட்டணி

(இ) பாவிக அணி (ஈ) வாழ்த்தணி

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

11. (அ) குளகச் செய்யுளின் இலக்கணத்தைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கௌட நெறியினைக் கூறுக.

12. (அ) தன்மை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வேற்றுப்பொருள் வைப்பணியின் இலக்கணத்தைக் கூறுக.

13. (அ) அதிசய அணியை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நிரல்நிறை அணியைச் சான்றுடன் தருக.

14. (அ) பரியாய அணியை எழுதுக.

(அல்லது)

(ஆ) செம்மொழிச் சிலேடை அணியை விளக்குக.

15. (அ) வஞ்சப்புகழ்ச்சியணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) பாவிக அணியை விளக்குக.

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

வினா (அ) அல்லது (ஆ) தேர்ந்தெடு.

16. (அ) பெருங்காப்பிய இலக்கணத்தை விளக்கமாக எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வைதருப்ப நெறிக்குரிய குணங்கள் ஐந்தினைச் சான்றுடன் தருக.

17. (அ) தொகை உருவகம், விரி உருவகத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.

(அல்லது)

(ஆ) வேற்றுமை அணியின் வகைகளை எடுத்துரைக்க.

18\. (அ) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) இலேச அணியின் இரண்டு வகைகளையும் சான்றுடன் தருக.

19\. (அ) தன் மேம்பாட்டுரை அணி, சமாயித அணி — விளக்கவும்.

(அல்லது)

(ஆ) விரோத அணியினை விளக்குக.

20\. (அ) நிதரிசன அணியின் இலக்கணம் கூறி, நன்மை தீமை நிதரிசனம், தீமை நிதரிசனம் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டு தருக.

(அல்லது)

(ஆ) புணர்நிலை அணியை விளக்கமாக எழுதவும்.

---